[23rd January 1965

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The number of cases of evasion of tax detected as a result of a preliminary check of secret accounts unearthed during the months of June, July and August 1964 are respectively 1473, 1465 and 1183.

(b) Their accounts are under scrutiny by the department.

திரு. கே. ஏ. மதியழகன் : இவற்றில் மாவட்ட வாரியாக எத்தனை கேஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்ற விவரத்தைக் கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாத வாரியாகத்தான் கணக்கு இருக்கிறது. மாவட்ட வாரியாகத் தனியாகக் கணக்கு தேடி எடுத்துக் கொடுக்க வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விற்பனை வரிக் கணக்குகளை ஏமாற்றி குறைத்துக் காட்டுவதன் முக்கிய நோக்கம் வருமான வரிக் கணக்குகளையும் ஏமாற்ற வேண்டுமென்ற காரணத்தால்தான். ஆகவே, வருமான வரியைத் தீவிரமாக வசூலிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் கேட்டுக்கொள்வார்களா? வருமான வரி அதிகாரிகளுக்கும், விற்பனை வரி அதிகாரிகளுக்கும் இடையே ஏதாவது இணைப்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் நல்ல முறையில் வருமான வரியை வசூல் செய்ய வேண்டுமென்றுதான் எப்போதும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். காரணம் என்னவென்று சொன்னால் அதிலே நமக்கு ஒரு ஷேர் இருக்கிறது. விற்பனை வரியையொட்டிச் சொல்வதில்லை. நம்மிடத்தில் ஏதாவது தகவல் கிடைத்தால் அந்தத் தகவல் மத்திய சர்க்காருக்கு உதவிகரமாக இருக்கும் என்று நினைத்தால், இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று நினைத்தால் அதை அந்த இலாகாவுக்குக் கொடுக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : விற்பனை வரிக் கணக்குகளைக் கண்டு பிடித்து நம்முடைய அதிகாரிகள் அந்த இடத்திலேயே அபராதம் விதித்துப் பணத்தை வசூல் செய்கிறார்கள். அப்படிப் பணத்தை வசூல் செய்யும் காரணத்தால் சில தவறுகள் ஏற்பட இடம் ஏற்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால் பதில் சொல்ல முடியும். தவறுகள் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அந்த மாதிரித் தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால் விசாரணை செய்யலாம்.

Motor Vehicles Act

* 90 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to amend the Motor Vehicles Act?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான பல்வேறு திட்டங்கள், இந்திய அரசாங்கத்தின் தீவிர ஆலோசனையில் உள்ளன.

23rd January 1965]

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமீபத்திலே சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்த தீர்ப்பின் விளைவாக பஸ் பர்மிட் கொடுப்பது பற்றிப் பிறப்பிக்கப்பட்ட ஜி.ஓ. 2562 ரத்து செய்யப்பட்டிருக்கிறதா? இதை அனுசரித்து பஸ் பர்மிட் கொடுப்பதற்கான சட்டத்தைத் திருத்த இந்தச் சபைமுன் திருத்தங்கள் கொண்டு வரப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய சர்க்கார் எந்தெந்தப் பிரிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வர உத்தேசித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி ராஜ்ய சர்க்காரைக் கலந்து ஆலோசித்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் அவ்வப்போது நமக்குக் கடிதங்கள் மூலமாக எழுதி இந்த விதமான திருத்தங்களைச் செய்யலாமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் தொகுத்துக் கொடுக்க வேண்டுமென்றால் கொஞ்சம் காலம் ஆகும். தனியாகக் கேள்வி போட்டால் தொகுத்துக் கொடுக்கமுடியும்.

Regional Transport Authorities

* 91 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute the Regional Transport Authorities under section 44 (2) of Motor Vehicles Act consisting of a Sub-Judge or a District Magistrate in place of a District Collector?

The Hon. Sri R. VENKATARAMAN : The matter is under consideration.

பஸ் பர்மிட்டுகள்

* 92. கேள்வி.—**திரு. ம. கமலநாதன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதிய பஸ் பர்மிட்டுகள் கொடுப்பதில் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government have left the matter entirely with the Regional Transport Authorities to deal with the applications for grant of permits on the merits of each case.